<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 26/2019**

2024ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய கிருஷ்ணகுமார் **DW.1** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 24.10.2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கிருஷ்ணகுமார் DW 1 | | | |
| Father Name | : | ஆறுமுகம் | Court | : | |
| Village | : | கிராம நிர்வாக அலுவலர், கிடாரங்கொண்டான். | Taluk | : | |
| Calling | : | | Religion | : | |
| Age | : | 35 | | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் கிடாரங்கொண்டான் கிராம நிர்வாக அலுவலராக 18.07.2024 முதல் பணிபுரிந்து வருகிறேன். பட்டா எண் 1873 ஆனது கலியபெருமாள் மகன் சரவணன் என்பவர் பெயரில் உள்ளது. பட்டா எண் 1873ல், சர்வே எண் 458/15 புஞ்சை 18-1/2 ஏர்ஸ், சர்வே எண் 460/9 புஞ்சை 7-1/2 ஏர்ஸ் உள்ளது. பட்டா எண் 425 சுப்பராயலு படையாச்சி மனைவி ஜானகி பெயரில் உள்ளது. அதில் புல எண் 460/14 புஞ்சை 1-1/2 ஏர்ஸ் உள்ளது. மேற்படி பட்டா எண் 425ல் மேற்படி புல எண்ணைத்தவிர வேறு எந்த புல எண்களும் இல்லை. புல எண் 458/15ஆனது அதன் பட்டாதாரரான சரவணன் என்பவரிடம் தான் அனுபவம் உள்ளது. **பட்டா எண் 425ற்கான நகலும், பட்டா எண் 1873ற்கான நகலும் அசல் ஆவணங்களுடன் ஒப்பிடப்பட்டு சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையில் புல

எண் 485/15ற்கான ஆவணங்களை நீதிமன்றத்திற்கு கொண்டுவருமாறு தான் உள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் புல எண் 458/15 குறித்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். (பின்னர் சாட்சி இல்லை என்று கூறுகிறார்). நான் 15.05.2015ல் கிராம நிர்வாக அலுவலகராக பணியில் சேர்ந்தேன். அப்போது நான் தரங்கம்பாடி தாலுக்கா அலுவலகத்தின் கீழ் பணிபுரிந்தேன் என்றால் சரிதான். நான் பணிபுரிந்த 2015ஆம் ஆண்டில் திருமதி. ஜெனிட்டா மேரி என்பவர் தலைமையிடத்து துணை வட்டாச்சியராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். 18.07.2024ஆம் தேதிக்கு பிறகு உள்ள விபரங்கள் தான் எனக்கு கிராடங்கொண்டான் கிராம நிர்வாக அலுவலர் என்ற முறையில் நேரடியாக தெரியும் என்றால் சரிதான். அதற்கு முந்தைய காலத்தை பொறுத்தவரை ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

புல எண் 458/15ஆனது எந்த ஆண்டில் பிரதிவாதி சரவணன் என்பவர் பெயருக்கு மாற்றப்பட்டது என்றால், நான் எடுத்து வந்த ஆவணத்தில் அது தொடர்பான விபரங்கள் இல்லை. ஒரு பெயரில் பட்டா மாறுதல் செய்யவேண்டும் என்றால் அந்த சொத்திற்கான உரிமை மூல ஆவணத்தின் அடிப்படையில் பட்டா மாற்றம் கோரினால் மட்டுமே துணை வட்டாச்சியர் பட்டா மாற்றம் செய்வார் என்றால் சரிதான். எதன் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்ற விபரங்கள் 8A கோப்பினை பார்த்தால் தான் தெரியும் என்றால் சரிதான். 8Aகோப்புகள் வட்டாச்சியர் அலுவலகத்தில் தான் பராமரிக்கப்படும். சட்டத்தின்படி வழங்கப்படும் பட்டா மற்றும் வருவாய் ஆவணத்தில் ஏற்படுத்தப்படும் பெயர் மாற்றத்தின் அடிப்படையில் ஏற்படும் பட்டா என இரண்டு வகைபாடுகள் கொண்டது.

மேற்படி வகைகளில் எந்த வகையில் அடிப்படையில் பிரதிவாதி சரவணன் பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு 22.10.2024 அன்று நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. மேற்படி அழைப்பானையை பெற்ற உடன் நான் பிரதிவாதியின் தகப்பனார் கலியபெருமாள் என்பவரை நேரில் சந்தித்தேன் என்றால் சரிதான். அவரிடமிருந்து சில தகவல்களை நான் பெற்றேன் என்றால் சரிதான். அழைப்பானை பெற்ற உடன் நான் வாதியை சந்தித்தேனா என்றால் நான் விசாரித்து பார்த்தேனா என்றால் வாதி சென்னை சென்றுவிட்டதாக கூறியதால் நான் அவரை சந்திக்கவில்லை. நான்

கிடாரங்கொண்டான் கிராம நிர்வாக அலுவலராக பதவி ஏற்ற நாளிலிருந்து புல எண் 458/15ற்கு சிட்டா அடங்கல் எதுவும் நான் வழங்கவில்லை என்றால் சரிதான்.

புல எண் 458/15 ஆனது தற்போது தரிசு நிலமாகத்தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி புல எண் தற்போது பிரதிவாதியின் வசம் உள்ளது என்பதை எதை வைத்து கூறுகிறேன் என்றால் பட்டாவானது பிரதிவாதியின் பெயரில் உள்ளதால் அவரது வசத்தில் உள்ளதாக கூறுகிறேன். ஆனால் புவியிலில் யாருடைய அனுபவத்தில் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புல எண் 485/15 சம்பந்தமாக சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை பெற்ற நான் பிரதிவாதியின் தந்தையை சந்தித்து அவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தகப்பனாரிடம் நான் புல எண் 458/15 தொடர்பாக சொத்துரிமை ஆவணங்களை பெற்று பரிசீலனை செய்தேனா என்றால் இல்லை.

நான் பிரதிவாதியின் தகப்பனாருடன் வஞ்சக்கூட்டு சேர்ந்துகொண்டு தவறான தகவல்களை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புல எண் 458/15 ஆனது சரவணன் என்பவருக்கு முன்னால் யார் பெயரில் இருந்தது என்றால் சு.ஜானகி என்பவர் பெயரில் இருந்தது. ஜானகி என்பவரின் பெயரிலிருந்து சரவணன் பெயருக்கு எதன் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்று எங்கள் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களில் உள்ளதா என்றால் இல்லை. புல எண்458/15ற்கு சொத்துரிமை ஆவணம் யார் பெயரில் ஏற்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. புல எண் 458/15ல் 5 செண்ட் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும், அதை வருவாய் துறையில் கவனிக்காமல் வருவாய் பதிவேடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பானை வந்த பிறகு நான் வாசா2ஆன வசந்தியை சந்தித்தேனா என்றால் இல்லை. அழைப்பானையில் புல எண் 485/15 சம்பந்தப்பட்ட ஆவணங்கள் குறித்து சாட்சியம் அளிக்க குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் புல எண் 458/15ற்கான கோப்புகளை நான் எதனால் கொண்டு வந்தேன் என்றால் நீதிமன்றத்தில் அனைத்துக்கோப்புகளையும் எடுத்து வரச்சொன்னதால் நான் கொண்டுவந்தேன். நான் பிரதிவாதியின் தந்தையை சந்தித்துள்ளதால் நான் அளிக்கும் சாட்சியம் ஒருதலைப்பட்சம் என்பதால் எனது

சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது சாட்சியம் சொத்துரிமை மாற்றுச்சட்டம், பதிவு சட்டம், இந்திய முத்திரைச்சட்டம் ஆகியவற்றுக்கு முரணாக உள்ளதால் எனது வருவாய் துறை ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.